[1981 மார்ச் 2

கோவாப்பரேடிவ் அர்பன் பாங்க் ஊழியர் கூட்டுறவுச் சங்கம், திருக்கோவிலூர்.

*வினா எண். 209—திரு. பி. ஈஸ்வரமூர்த்தி என்கிற சொரணம்: மாண்புமிகு கூட்டுறவு-சட்ட அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) திருக்கோவிலூர் கோவாப்பரேட்டிவ் அர்பன் பாங்க் ஊழியர்களின் கூட்டுறவு சொசைட்டியில் பணம் கையாடல் செய்யப்பட்டுள்ளதென்பது உண்மையா ?

(ஆ) ஆம் எனில், இது பற்றிய விவரம் யாது ?

(இ) அரசு என்ன நடவடிக்கை எடுத்துள்ளது ?

மாண்புமிகு திரு சி. பொன்னையன்: (அ) ஆம்.

(ஆ) மற்றும் (இ) இதுபற்றி * அறிக்கை ஒன்று அவையில் வைக்கப்பட்டுள்ளது.

இரயில்வே துறையினரால் பயன்படுத்தப்படும் எடை நிறுக்கும் தராசுகள்.

*வினா எண் 210—திரு. ந. சிவஞானம் : மாண்புமிகு கூட்டுறவு-சட்ட அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) தமிழ்நாட்டில் இரயில் நிலையங்களில் உள்ள எடை நிறுக்கும் தராசுகளை மாநில அரசு மறுபரிசீலனை செய்து முத்திரையிடுவதற்கான செயற்குறிப்பு அரசிடம் உண்டா ?

(ஆ) ஆம் எனில், அத்திட்டம் எந்நிலையில் உள்ளது ?

மாண்புமிகு திரு. சி. பொன்னையன் : (அ) ஆம்.

(ஆ) இத் திட்டத்தை செயல்படுத்தும் வகை குறித்து தென்னக இரயில்வே நிர்வாகத்தினருடன் அரசு கலந்து ஆலோசித்து வருகிறது.

---

*[120-ஆம் பக்கத்தில் இணைப்பு—ஆக அச்சிடப்பெற்றுள்ளது.]